**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 13.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
**•••••••••**

**வழக்கு எண்.SA 1220/E/2019**

திருமதி செ.ஜனனி ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
அம்பத்தூர் வட்டம்,
சென்னை. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 31.08.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 02.11.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 11.02.2019 |

******

**ஆணை**

இன்று (13.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திருமதி செ.ஜனனி ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு ச.சிவக்குமார், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், அம்பத்தூர் வட்டம், சென்னை ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 31.08.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் தனது ஜாதிச் சான்றிதழ் எண்.1941117 பொதுத் தகவல் அலுவலரின் ஆளுகையின்கீழ் உள்ள எந்த தாலுக்கா வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, மேற்படி பதிவேட்டின் நகல் ஆகியவற்றைத் தகவலாகக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளரின் மனுவானது 23.10.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், அம்பத்தூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 02.11.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளருக்கு 23.11.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் முழுமையாக வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 11.02.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ள சாதிச் சான்று எண். கொண்ட ஆதி திராவிடர் சாதிச் சான்று அட்டை சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் இடம்பெறவில்லையென்றும், மேற்படி தகவல் மேல்முறையீட்டாளருக்கு 23.11.2018 மற்றும் 12.09.2019 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. பொதுத் தகவல் அலுவலரால் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள தகவலை ஆணையம் ஏற்கவில்லை. மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள சாதிச் சான்றிதழில் அம்பத்தூர் வட்டாட்சியர் அலுவலக எண்.R.Dis.5594/2000/அ2, நாள் 12.07.2000 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதனை ஆணையம் பதிவு செய்து, மேற்படி காலத்திற்கான பகிர்மானப் பதிவேட்டை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்யுமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டு, வழக்கின் விசாரணை பிற்பகல் 4.00 மணிக்கு மாற்றி வைக்கப்பட்டது.

7. ஆணையம் அறிவுறுத்தியதன் அடிப்படையில் பொதுத் தகவல் அலுவலர் இன்று (13.09.2019) பிற்பகல் 4.00 மணிக்கு மேற்படி பதிவேட்டினை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார். மேற்படி பதிவேட்டினைப் பரிசீலனை செய்கையில், 5594 என்ற எண். அ2 இருக்கைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதும், மேற்படி எண். கொண்ட கோப்பு முடிவுற்றதற்கான எந்த பதிவுகளும் இல்லையென்பதும், இதுவரை வைப்பறையில் ஒப்படைக்கப்படவில்லை என்பதும் தெரிய வருகிறது. இதனை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

> **மேல்முறையீட்டாளர் 31.08.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவல் தொடர்பாகப் பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள 5594 என்ற எண்ணுடைய கோப்பினைக் கண்டறிந்து, மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 45 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஓம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>**வழக்கு எண்.**SA 1220/E/2019</u>

பெறுநர்

<u>**பொது அதிகார அமைப்பு**</u>

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
அம்பத்தூர் வட்டம்,
சென்னை.

<u>**மனுதாரர்**</u>

திருமதி செ.ஜனனி,
எண்.4/608, முகப்பேர் மேற்கு,
முகப்பேர்,
சென்னை - 37.

Copy to: Judgement File.
20/09/19